NDB வங்கி
எதிர்கால வங்கியியல் முன்னோடி

NDB SHAREEK Together We Grow

நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி
(கம்பெனிப் பதிவு இல. PQ 27)
இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 02

D D M M Y Y Y Y திகதி

முகாமையாளர்

நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி

.....................................................கிளை

# நானாவித உருவகங்களுக்கான கணக்கு திறத்தல் முதன்மைப் பொறுப்பாண்மைப் படிவம்

**வங்கியின் பயன்பாட்டுக்கு மட்டும்**

CID ☐☐☐☐☐☐☐☐

**கணக்கு வகை**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| களரி/ சங்கம் | ☐ | கழகம் | ☐ | நிதியங்கள் | ☐ | வேறு | ☐ |
| NGO / NPO | ☐ | நம்பிக்கைப்பொறுப்பு/ தரும நிறுவனம் | ☐ | தூதரகம் / இராஜதந்திர / வேறு குழு | ☐ | | |

**Basel வகைப்படுத்துகை**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| SME | ☐ | பதிவுசெய்யப்பட்ட FI | ☐ | அரசாங்கத்துறை உருவகம் | ☐ | வேறு | ☐ |
| கூட்டாண்மை நிறுவனம் | ☐ | வேறு FI | ☐ | உயர் ஆபத்து வகை | ☐ | | |

1. ..................................................................................................................................................................................................
..................................................................................................................................................................................................
(உருவகம் / நிதியம்) (பதிவு இல........................) ஆகிய நாம், குறிப்பிட்ட கணக்கு திறத்தல் படிவத்தில் / படிவங்களில் தரப்பட்டவாறு தலைப்பு வாசிக்கப்படவேண்டிய கணக்கை / கணக்குகளைத் திறப்பதற்கு PQ 27 என்னும் பதிவிலக்கத்தைக்கொண்ட நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி (NDB) வங்கி அதன் அடுத்துறுநர்கள் மற்றும் சாட்டுநர்களை இத்தால் கோருகின்றோம்.

2. அத்தகைய கணக்கு / கணக்குகளின் தொழிற்பாட்டை ஆளும் NDB வங்கியின் நியதிநிபந்தனைகளுடன் இணங்கியொழுகுவதற்கும் அவற்றினால் பிணிக்கப்படுவதற்கும் நாம் உடன்படுகின்றோம்.

3. இப்பொருள்பட்ட ஒரு தீர்மானம் / கூட்ட நிகழ்ச்சிக்குறிப்புகள் முறையான உறுப்பினர்கள் / குழுக்கள் / நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் / அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினரின் கூட்டமொன்றில் உரியமுறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும் அது நிகழ்ச்சிக் குறிப்புப் புத்தகத்தில் உரியமுறையில் பதியப்பட்டுள்ளது எனவும் உருவகத்தின் அமைப்பக விதிகள் / யாப்பு / நம்பிக்கைப்பொறுப்பு உறுதி / விதிகளுக்கு இணங்க உள்ளதெனவும் நாம் சான்றுப்படுத்துகின்றோம் (சான்றுப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பொன்று இத்துடன் இணைக்கப்படுகின்றது / தற்போதைய பதவிதாங்குநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்ட நிகழ்ச்சிக்குறிப்புகளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இத்துடன் இணைக்கப்படுகின்றன).

4. ஏற்புடையவாறு பதவிதாங்குநர்கள், நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினர் பற்றிய விபரங்கள் கீழே நிரற்படுத்தப்படுகின்றன (கணக்கை / கணக்குகளைத் தொழிற்படுத்தும் நோக்கத்துக்காக மட்டும் நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்கள் இங்கு உள்ளடக்கப்படவில்லை).

| | முழுப்பெயர் | பதவிப்பெயர் / வகிபங்கு | தே.அ.அ. / கடவுச்சீட்டு இலக்கம் | தேசிய இனம் | நிரந்தர முகவரி | FATCA இன் கீழ் பொறுப்பாகவிருப்பின் - TIN / சமூகப் பாதுகாப்பு இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| I | | | | | | |
| II | | | | | | |
| III | | | | | | |
| IV | | | | | | |
| V | | | | | | |

குறிப்பு:
மேலே விடயம் 4 இல் குறிப்பிடப்பட்ட எல்லாத் தனிநபர்களினதும் விபரங்களைக் குறிப்பிடுவதற்கு இடைவெளி போதியதாகவிராதிருப்பின்,

செயலாளர் / பதவிதாங்குநர்கள் / நம்பிக்கைப்பொறுப்பாளர்களிடமிருந்தான சான்றுப்படுத்துகையுடன் தனிவேறான தாளொன்றை இணைக்கவும்.

மேலே விடயம் 4 இல் குறிப்பிடப்பட்ட எல்லாத் தனிநபர்களும் 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 2(3) இன் நியதிகளின்படி மேலேயுள்ள தகவல்களுக்கு மேலதிகமாக "தனிநபர் சுயவிபரப் படிவங்களைப்" பூரணப்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

| உருவகம் பற்றிய தகவல்கள் | |
|---|---|
| கைத்தொழில் / ஒழுங்கமைப்பு / உருவகம் / நிதியத்தின் தன்மை: | கூட்டிணைக்கப்பட்ட / பதிவுசெய்யப்பட்ட நாடு: |
| கூட்டிணைக்கப்பட்ட / பதிவுசெய்யப்பட்ட திகதி: D D M M Y Y Y Y | தொடங்கும் திகதி: D D M M Y Y Y Y |
| *பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி: | *கடிதத்தொடர்பு முகவரி: |
| இலங்கையில் கணக்கு / கணக்குகள் திறப்பதன் நோக்கம்: (வதிவற்ற உருவகங்களுக்கு) | |
| *(வேறுவகையாக குறித்துரைக்கப்பட்டாலொழிய கடிதத்தொடர்பு ஆவணங்கள் NDB வங்கியினால் கணக்குவைத்திருப்பவருக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படும்.) | |

**5. உருவகத்துக்கான பிரதான நிதி மூலம்**

- ☐ பங்கு மூலதனம்
- ☐ உறுப்பாண்மைக் கட்டணங்கள்
- ☐ பொதுமக்களிடமிருந்தான வைப்பு
- ☐ மானியங்கள்
- ☐ வேறு (குறித்துரைக்கவும்) ……...........

**6. உருவகத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் சொத்துக்கள் மற்றும் இலங்கை ரூபாவில் மதிப்பிடப்பட்ட பெறுமதி**

- ☐ ஆதனம் / வளவுகள் (இ.ரூ. ..........................................................)
- ☐ மோட்டார் வாகனம் / வாகனங்கள் (இ.ரூ. ..........................................................)
- ☐ நிதிசார் சொத்துக்கள் (இ.ரூ. ..........................................................)
- ☐ முதலீடுகள் (இ.ரூ. .......................................)
- ☐ வேறு (குறித்துரைக்கவும்) ……...........................
- ☐ சொத்துக்கள் கிடைக்கப்பெற்ற திகதி D D M M Y Y Y Y

**7. சொத்துக்கள் கொள்ளுதல் செய்யப்படும் முறை**

- ☐ மூலதனம்
- ☐ நன்கொடைகள் (உள்நாட்டு / வெளிநாட்டு)
- ☐ வேறு (குறித்துரைக்கவும்) ............................
- ☐ முதலீடுகள்
- ☐ வியாபார வருமானம்
- ☐ வங்கி வசதிகள்
- ☐ எதிர்பார்க்கப்பட்ட எதிர்த்திறத்தவர்கள்

**8. வேறு தொடர்புபட்ட வியாபாரங்கள் / உயர்தொழில்சார் செயற்பாடுகள் / எதிர்பார்க்கப்பட்ட எதிர்த்திறத்தவர்கள் வகை (ஏற்புடையதாயின்)**

**9. அமைப்பு: (பொருத்தமான பெட்டியைக் குறியிடவும்)**

- ☐ பாராளுமன்ற சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டது
- ☐ வரையறுக்கப்பட்ட தனியார் கம்பெனி
- ☐ வரையறுக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனி – கூறுவிலையிடப்படாதது
- ☐ வரையறுக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனி – கூறுவிலையிடப்பட்டது
- ☐ உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பெனிகள்
- ☐ வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் ஏனையவை
- ☐ கரை கடந்த வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பெனி
- ☐ பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனி
- ☐ அரச சார்பற்ற நிறுவனம்
- ☐ தரும நிறுவனம் / நிதியம் / கழகம்
- ☐ நம்பிக்கைப்பொறுப்பு உறுதி / களரி / சங்கம் / NPO
- ☐ வேறு (குறித்துரைக்கவும்) ……..................

**10. பிரதான வியாபாரச் செயற்பாடு: (பொருத்தமான பெட்டியைக் குறியிடவும்):**

- ☐ சமூக சேவைகள்
- ☐ கல்வி
- ☐ சேமநலன்
- ☐ தருமம்
- ☐ வாழ்க்கைத் தொழில்சார் சேவைகள்
- ☐ உயர்தொழில்சார் சேவைகள்
- ☐ சேவைக் கைத்தொழில் (குறித்துரைக்கவும்)
- ☐ வேறு (குறித்துரைக்கவும்) ……..................

உருவகத் தொழிற்பாட்டுக்கு கணக்கின் பயன்பாட்டின் %

☐ ≤ 26 % ☐ 26% - 50 % ☐ 51% - 75% ☐ ≥ 76 %

**11. உருவகத்தின் துணைநிலைக் கம்பெனிகள் / இணைந்த கம்பெனிகள்**

11.1 உருவகம், வேறொரு ஒழுங்கமைப்பின் துணைநிலைக் கம்பெனியா / இணைந்த கம்பெனியா? ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனின் - (i) ______________________ இன் துணைநிலைக் கம்பெனி

(உ+ம் 50 % இற்கு மேற்பட்ட சொத்துவம்)

(ii) ______________________ இன் இணைந்த கம்பெனி

(உ+ம் 20 % - 50 % இற்கிடையிலான சொத்துவம்)

11.2 உருவகத்தின் எவையேனும் துணைநிலைக் கம்பெனிகள் அல்லது இணைந்த கம்பெனிகள் உள்ளனவா? ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனின் -

| துணைநிலைக் கம்பெனி (உ+ம் 50 % இற்கு மேற்பட்ட சொத்துவம்) | இணைந்த கம்பெனி (உ+ம் 20 % - 50 % இற்கிடையிலான சொத்துவம்) |
|---|---|
| (i) | (i) |
| (ii) | (ii) |

**12. வரையறுக்கப்பட்ட பொறுப்புடனான களரிகள் / சங்கங்கள் / கழகங்கள் / அரசசார்பற்ற நிறுவனங்கள் / நம்பிக்கைப்பொறுப்பு / NPO / தரும நிறுவனங்கள் / நிதியங்கள், குறிக்கோள்கள் / நோக்கெல்லை மற்றும் செயற்பாட்டுத் துறைகள் பற்றிய விபரங்களை வழங்குதல் வேண்டும்.**

**13. வரி வெளிப்படுத்துகை**

13.1 வருமான வரி கோப்பு இலக்கம்: 13.2 VAT கோப்பு இலக்கம்:

13.3 உருவகம் இலங்கைக்கு வெளியே வரி செலுத்துநர் ஒருவரா - ஆம் ☐ இல்லை ☐ 13.4 SVAT கோப்பு இலக்கம்:

ஆம் எனின் வரி அடையாள / கோப்பு இல : நாடு :

**14. உருவகம் / நிதியங்கள் தொடர்பான தகவல்களுக்கு பிரதானமாக தொடர்புகொள்ளக்கூடிய நபர்.**

பெயர் : தொலைபேசி இலக்கங்கள் நிலையான தொலைபேசி :

பதவிப் பெயர் : கையடக்கத் தொலைபேசி :

மின்னஞ்சல் : தொலைநகல் இலக்கம் :

**15. வங்கித்தொழில் தொடர்புகள் - பொருத்தமானவாறு பூரணப்படுத்தவும்.**

15.1 வேறு வங்கிகள் / நிதி நிறுவனங்களுடனான (FI)தொடர்பைக் குறிப்பிடவும்

| வங்கி / நிதி நிறுவனம் | கிளை | கணக்கு வகை | இலக்கம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

15.2 ஏற்கனவேயுள்ள வசதிகள் (வேறு வங்கிகள் / நிதி நிறுவனங்களுடன்)

☐ மேலதிகப்பற்று ☐ கடன் ☐ இறக்குமதி / ஏற்றுமதி வசதிகள்

☐ வேறு வசதிகள் (குறித்துரைக்கவும்) ……......................

**16. அரசியல்ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் (PEP) தொடர்பான தகவல்கள்**

16.1 பணிப்பாளர்கள், பங்குதாரர்கள், பதவிதாங்குநர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்களுள் எவரேனும் ஒருவர் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் (PEP) ஒருவரா?

ஆம் ☐ இல்லை ☐

அல்லது

16.2 அத்தகைய பணிப்பாளர் அல்லது பங்குதாரர், பதவிதாங்குநர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநரின் எவரேனும் நெருங்கிய குடும்ப உறுப்பினர் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் (PEP) ஒருவரா : ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனின் அத்தகைய ஆட்களின் பெயர்களையும் PEP உடனான உருவகத்தின் தொடர்பையும் குறிப்பிடவும்.

| நபர் / நபர்களின் பெயர் | "PEP" உடனான உருவகத்தின் தொடர்புமுறை |
|---|---|
| | |
| | |
| | |
| | |

நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி உடனான எமது கணக்குத் தொடர்பு நாம் வாசித்து, விளங்கிக்கொண்டு எமக்கு விளங்கப்படுத்தப்பட்டு அவற்றினால் பிணிக்கப்படுவதற்கு நாம் உடன்பட்டுள்ள மறுபக்கத்திலுள்ள நியதிநிபந்தனைகளுக்கு அமைந்ததாகும் என இத்தால் நாம் உறுதிப்படுத்தி ஒப்புக்கொள்கின்றோம். உருவகத்தின் பதவிதாங்குநர்கள் /அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்கள் / அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினர் / பயனுகரி சொந்தக்காரர்கள் மற்றும் எம்மால் வங்கிக்கு வழங்கப்பட்ட வேறு எவையேனும் தகவல்களிலான ஏதேனும் மாற்றம் பற்றி எழுத்தில் உடனடியாக NDB வங்கிக்கு அறிவிப்பதற்கு நாம் பொறுப்பேற்கின்றோம் என்பதுடன் வங்கி காலத்துக்குக்காலம் தேவைப்படுத்துகின்றவாறான எவையேனும் மேலதிக தகவல்களை அல்லது ஆவணங்களை வழங்குவதற்கும் உடன்படுகின்றோம்.

| அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்* | அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்* | அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்* |
|---|---|---|

*உருவகத்தின் ஆளும் குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்கள்

| உருவகத்தின் இறப்பர் முத்திரைப் பொறிப்பு | உருவகத்தின் இறப்பர் முத்திரைப் பொறிப்பு |
|---|---|
| | |

**வங்கியின் பயன்பாட்டுக்கு மட்டும்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தரவுகள் பரீட்சிக்கப்பட்டு / சரிபார்க்கப்பட்டு மற்றும் கணக்கு திறக்கப்பட்டது யாரால் (EPF, பெயர், கையொப்பம்) | | தரவுகள் பரீட்சிக்கப்பட்டு / சரிபார்க்கப்பட்டு மற்றும் கணக்கு அதிகாரமளிக்கப்பட்டது யாரால் (EPF, பெயர் , கையொப்பம்) | | | |
| மேம்படுத்துநரின் குறியீடு | | மேம்படுத்துநரின் கையொப்பம் | | திகதி | |

## நியதிகள் மற்றும் நிபந்தனைகள் - நானாவித உருவகங்கள்

PQ 27 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்ட தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சியினால் ("NDB" அல்லது "வங்கி") குறிப்பாகத் தரப்பட்டுள்ள அளவுவரை தவிர, களரி, சங்கம், கழகம், நம்பிக்கைப்பொறுப்பு, NGO, NPO, தரும நிறுவனம் அல்லது வேறு ஏதேனும் உருவகத்தின் பெயரினால் (வியாபார நிறுவனம், உருவகம் அல்லது கணக்கு வைத்திருப்பவர்) இதன்பின்னர் திறக்கப்பட்ட அல்லது அப்பெயரில் தொடர்ந்து நடாத்தப்பட்ட எத்தன்மையினதுமான ஒவ்வொரு கணக்குக்கும் (கணக்கு / கணக்குகள்) இந்நியதி நிபந்தனைகள் ("நியதி நிபந்தனைகள்") ஏற்புடையனவாதல் வேண்டும். (ஒருமைக்கான குறிப்பீடுகள் பன்மையையும் மறுதலையாகவும் உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன், ஆண்பாலைக் குறிக்கும் சொற்கள் பெண்பாலை உள்ளடக்குதலும் வேண்டும்)

1. NDB வங்கியில் பேணப்படும் எல்லாக் கணக்குகளும் பின்வருவனவற்றினால் ஆளப்படுதல் வேண்டும் என கணக்குவைத்திருப்பவர் இத்தால் ஒப்புக்கொண்டு உடன்படுகின்றார்,

   அ) NDB வங்கியினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வழிகாட்டுநெறிகள் மற்றும் நியதிநிபந்தனைகள்

   ஆ) காலத்துக்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) விதிக்கப்படும் விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகள், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரினால் அல்லது வேறு எவரேனும் அதிகாரியினால் வழங்கப்படும் பணிப்புரைகள் மற்றும் இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டங்கள்.

2. இந்நியதி நிபந்தனைகளுக்கும் அத்துடன் / அல்லது மேலே (அ) அல்லது (ஆ) இல் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கும் இடையில் ஏதேனும் ஒவ்வாமை உள்ள பட்சத்தில், பின்னைய (2ஆ) இல் அடங்கியுள்ள ஏற்பாடுகள் முன்னுரிமையைப் பெறுதல் வேண்டும்.

3. கணக்குவைத்திருப்பவர், வியாபார நிறுவனம் அல்லது உருவகத்தின் உருவாக்கத்தை சான்றுப்படுத்துகின்ற வியாபார / உருவகப் பதிவுச் சான்றிதழின் ஒரு பிரதி அத்துடன் / அல்லது வேறு ஆவணங்கள் மற்றும் வங்கி காலத்துக்குக் காலம் கோரக்கூடிய வியாபார நிறுவனம் அல்லது உருவகம் தனது தொழிலை / தொழிற்பாடுகளை இலங்கையில் கொண்டுநடாத்துவதற்கான தற்போதைய எல்லா உரிமங்களையும், அங்கீகாரங்களையும் மற்றும் சம்மதங்களையும் உடனடியாக வங்கிக்கு வழங்குதல் வேண்டும்.

4. கணக்குவைத்திருப்பவர் கணக்கை (கணக்குகளை) தொழிற்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்களை நியமித்தல் வேண்டும் என்பதுடன் கணக்கு வைத்திருப்பவர் சார்பாக (காசோலைகள், பற்று கட்டளைகள் முதலியனவற்றை) கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் மாதிரிக் கையொப்பங்களை NDB வங்கிக்கு வழங்குவதற்கு கடப்பாடுடையவராதலும் வேண்டும். வியாபார நிறுவனம், உருவகம் அல்லது கணக்கு வைத்திருப்பவர் அவசியமான பொறுப்பாணை மற்றும் தேவைப்படுத்தப்பட்ட எல்லா ஆவணங்களுடனும் (பொறுப்பாணை) சேர்த்து ஒவ்வொரு கணக்குக்குமான இயைபான கணக்கு திறத்தல் படிவங்களை சமர்ப்பிப்பதன் மேல், வங்கியானது அதன் தனித் தற்றுணிபில் கணக்குவைத்திருப்பவரினால் திறக்கப்படுவதற்கு கோரப்பட்ட கணக்கை (கணக்குகளை) திறக்கலாம்.

5. கணக்குவைத்திருப்பவர், பொறுப்பாணையில் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்க வரையப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கையொப்பமிடப்பட்ட அறிவுறுத்தல்கள் அல்லது ஆவணங்கள் மீது வங்கி செயலாற்றுவதற்கு அதிகாரமளித்தல் வேண்டும். தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான எவையேனும் மாற்றங்கள் அல்லது அவற்றை இல்லாதொழித்தல் உருவகத்தின் ஆளும் குழுவினால் நிறைவேற்றப்படும் தீர்மானமொன்றின் மூலம் வழங்கப்படுதல் வேண்டும் என கணக்குவைத்திருப்பவர் உடன்படுகின்றார். இவ்வாசகத்தில் குறிப்பிடப்பட்டவாறு மாதிரிக் கையொப்பங்களை கொடுத்துதவுவதற்கான கணக்குவைத்திருப்பவரின் அசட்டை மூலம் அல்லது அவற்றை பிழையாக அல்லது பூரணமற்றதாக கொடுத்துதவுவதன் மூலம் கணக்கு வைத்திருப்பவர் சேதம் அல்லது இழப்பை ஏற்கநேர்ந்தால் NDB வங்கி அதற்குப் பொறுப்பாகாது.

6. கணக்குவைத்திருப்பவர் NDB வங்கியுடன் செய்துகொண்ட விசேட ஒழுங்கேற்பாடுகள் மூலம் தவிர அவரது கணக்கிலிருந்து (கணக்குகளிலிருந்து) மேலதிகப்பற்றாகப் பெறுதலாகாது. கணக்கில் (கணக்குகளில்) நிதிகள் போதியதாகவிராதிருப்பின் காசோலைகளுக்கு மதிப்பளிக்காமலிருப்பதற்கும் செலுத்தப்படாது திருப்பி ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு காசோலைக்கும் அறவிடுவதற்கும் NDB வங்கி உரிமையைக் கொண்டுள்ளது.

7. **கணக்கு வைத்திருப்பவர் தனது கணக்கில் போதுமான நிதியை வைத்திருக்கவில்லை என்றால்இ பணம் செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு காசோலையையும் வங்கி அவமதிக்கும் உரிமையைக் கொண்டிருக்கும். காசோலை செலுத்தப்படாமல் திரும்பினால்இ அதன் நடைமுறையில் உள்ள கொள்கைகளின்படிஇ ஒவ்வொரு அவமதிப்பு நிகழ்வுக்கும் வங்கி பொருந்தக்கூடிய கட்டணங்களை விதிக்கலாம்.**

8. **மேற்கூறியவற்றைப் பொருட்படுத்தாமல்இ வாடிக்கையாளர் ஏற்கனவே வகாலா வசதியைப் பெற்றிருந்தால்இ வகாலா ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டுஇ அடுத்தடுத்த காசோலைகளை அனுமதிப்பதா அல்லது அவமதிப்பதா என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.**

9. கணக்குவைத்திருப்பவர் NDB வங்கியின்பால் உள்ள எத்தகையதுமான அம்சத்திலும் கணக்குவைத்திருப்பவரின் கடப்பாடுகளை எதிர்கொள்வதற்கு தவறுகின்றபட்சத்தில், NDB வங்கிக்கு, அதன் நிறைவேற்றுகை உரிமைக்கு மேலதிகமாக, **லாபம்** மற்றும் செலவுகள் உட்பட கொடுத்துத்தீர்த்தல் நேரம் வரை NDB வங்கிக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தொகைகளுக்கும் ஏதேனும் முன்னறிவித்தலை வழங்காமல் அல்லது முன்னதாக அழைப்பாணைகளை வழங்காமல் அது முறையானது எனக் கருதுகின்றவாறான அத்தகைய நேரத்திலும் அத்தகைய முறையிலும் பிணைப்பொறுப்பின் முழுமையை அல்லது பகுதியை தேறிப்பெறுவதற்கும் வரும்படிகளிலிருந்து அதனை மீளளிப்பதற்கும் அதிகாரமளிக்கப்படுகின்றது.

10. சட்டத் தொழிற்பாட்டின் மூலம் அல்லது வேறு வகையாக NDB வங்கி உரித்துடையதாகக்கூடிய ஏதேனும் பொதுவான சோந்தை அல்லது வேறு உரிமைகள் அல்லது பரிகாரங்களுக்கு மேலதிகமாக, NDB வங்கியானது எந்நேரத்திலும் கணக்கு வைத்திருப்பவருக்கான அறிவித்தலின்றியும் கணக்குவைத்திருப்பவரினால் NDB வங்கிக்கு சேர்மதியாகவுள்ள பொறுப்புக்களுடன் கணக்குவைத்திருப்பவரின் எல்லா அல்லது எவையேனும் கணக்குகளை இணைக்கலாம் அத்துடன் / அல்லது ஒன்றுதிரட்டலாம் என்பதுடன் அத்தகைய பொறுப்புக்கள் உள்ளபடியாக அல்லது எதிர்பாராததாக, பிரதானமாக அல்லது இணையுருவாக தனியாக அல்லது கூட்டாக இருப்பினுஞ்சரி மேற்கூறப்பட்ட அத்தகைய எவையேனும் கணக்குகளின் வரவுக்கு இருக்கும் எவையேனும் தொகைகளை எதிரீடுசெய்யலாம் அல்லது கைமாற்றலாம்.

11. **லாபப் பகிர்வு விகிதம்** மாற்றங்கள் பற்றிய எழுத்திலான அறிவித்தல் அல்லது வேறு ஏதேனும் அறிவித்தல் உள்நாட்டு பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அத்துடன் / அல்லது வங்கியின் வளவுகளில் அத்துடன் / அல்லது வங்கியின் இணையத்தளத்தில் வெளிக்காட்டிவைக்கப்பட்ட அறிவித்தல் மூலம் அத்துடன் / அல்லது வங்கிக்கூற்று மூலம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் கணக்கு வைத்திருப்பவருக்கு அதன் உரியமுறையிலான மற்றும் போதிய அறிவித்தலாக கருதப்படுதலும் வேண்டும்; அது கணக்கு வைத்திருப்பவர் மீது பிணிக்கப்படுதலும் வேண்டும்.

12. வங்கியானது, கணக்கு தொடர்பில் அல்லது வங்கியினால் கணக்குவைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட வேறெவையேனும் வங்கித்தொழில் வசதிகள்
தொடர்பில் வங்கியின் இணையத்தளத்தில் அவற்றை வெளியிட்டதன் பின்னர் வழக்கமுறையான எல்லா வங்கித்தொழில் மற்றும் வேறு விதிப்பனவுகளையும் செலவுகளையும் அறவிடுவதற்கும் அல்லது விதிப்பதற்கும் வங்கியின் வழமையான வங்கித்தொழில் நடவடிக்கைமுறைகளுக்கு இணங்க இயைபான கணக்குக்கு (கணக்குகளுக்கு) பற்று வைப்பதற்கும் எப்போதும் உரித்துடையதாதல் வேண்டும். எவையேனும் அல்லது எல்லாக் கணக்குகளும் முடிவுறுவதன் மேல் / மூடிவிடப்படுவதன் மேல் அத்தகைய விதிப்பனவுகள் மீளளிக்கப்படத்தக்கதல்ல என கணக்குவைத்திருப்பவர் உடன்படுகின்றார்.

13. வரவுப் பதிவீடுகளுக்கு எதிராக செல்லுபடியாக்குகின்றதும் கணக்கு வைத்திருப்பவரிடமிருந்தானதுமான அல்லது அவர் சார்பாக ஏதேனும் எதிர்ப்பெறுமதியை NDB வங்கி பெறவேண்டியிருப்பின், அவை முறையாகவும் உரியநேரத்திலும் பெறப்படுதல் வேண்டும் என்ற ஏற்பாட்டுடன் அப்பதிவீடுகள் அதனால் பயனுறுத்தப்படுகின்றன. அதன் தவறுகையின் மேல், அறிவித்தலின்றி முழுமையாக அல்லது பகுதியளவில் வரவுப் பதிவீட்டை எதிர்மாறாக்குவதற்கு NDB வங்கி உரித்துடையதாகும்.

14. கணக்குவைத்திருப்பவரினால் கோரப்படக்கூடிய அத்தகைய கால இடைவெளிகளில் வங்கி கணக்குக்கூற்றை (கூற்றுக்களை) அனுப்பும் என்பதை கணக்குவைத்திருப்பவர் விளங்கிக்கொள்கின்றார். எவையேனும் அறிவுறுத்தல்கள் இல்லாத போது வங்கியின் வழமையான வங்கித் தொழில் நடவடிக்கைமுறைகளுக்கிணங்க முறையான கணக்குக்காக வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கால இடைவெளிகளில் வங்கிக்கூற்றுகள் அனுப்பப்படுதல் வேண்டும். அதன்மீதுள்ள எல்லாப் பதிவுகளையும் உடனடியாகப் பரீட்சிப்பதற்கு கணக்குவைத்திருப்பவர் தனியாகப் பொறுப்பாகவுள்ளார் என்றும் அத்தகைய ஏதேனும் வங்கிக் கூற்றுக்கும் கணக்குவைத்திருப்பவரின் சொந்தப் பதிவேடுகளுக்குமிடையே உள்ளதென கணக்குவைத்திருப்பவர் நம்புகின்ற ஏதேனும் ஒவ்வாமைபற்றி, இயைபான வங்கிக் கூற்றுத் திகதியிலிருந்து ஏழு (7) நாட்களினுள் எழுத்திலான அறிவித்தலை கணக்குவைத்திருப்பவர் வங்கிக்கு வழங்குதல் வேண்டும் என்றும் இத்தால் கணக்குவைத்திருப்பவர் உடன்படுகின்றார். கணக்குவைத்திருப்பவரிடமிருந்து அத்தகைய ஏதேனும் அறிவித்தல் பெறப்படாவிடின், இயைபான கணக்கு (கணக்குகள்) பற்றிய கூற்றின் சரியான தன்மை பற்றி (எல்லா நோக்கங்களுக்காகவும்) கணக்குவைத்திருப்பவர் உடன்பட்டிருந்து அதனை முடிவான முறையில் சான்றுப்படுத்தியுள்ளார் என கணக்குவைத்திருப்பவர் கருதப்படுதல் வேண்டும். மேலேயுள்ளதற்குப் பங்கமின்றியும் இது தொடர்பில் வங்கி மீது ஏதேனும் கடப்பாட்டைச் சுமத்தாமலும், அத்தகைய ஏதேனும் கணக்கு (கணக்குகள்) பற்றிய கூற்று தொடர்பில் வங்கி அடுத்துப்பின்னர் ஏதேனும் பிழையைக் கண்டுபிடித்தால், வங்கியினால் அது கண்டுபிடிக்கப்பட்டவுடன் கணக்குவைத்திருப்பவரது ஏதேனும் கணக்குக்கு (கணக்குகளுக்கு) பற்றுவைப்பதன் மூலம் அல்லது வரவு வைப்பதன் மூலம் ( தோதானவாறு ) அதனை அது நிவர்த்திசெய்யலாமென இத்தால் கணக்குவைத்திருப்பவர் உடன்படுகின்றார்.

15. ஏற்புடையனவான சட்டங்களுக்கு அமைய, பின்வரும் நியதிகள் NDB வங்கியுடனான கணக்கின் மீது கணக்குவைத்திருப்பவரினாலான காசோலை பெறுதல்களை ஆளும்.

   அ) கணக்குவைத்திருப்பவர் NDB வங்கியினால் வழங்கப்படும் காசோலைப் புத்தகத்தை பாதுகாப்பான கட்டுக்காப்பில் வைத்திருத்தல் வேண்டும். காசோலைப் புத்தகம் அல்லது எவையேனும் காசோலை இதழ்கள் காணாமல் போகின்ற அல்லது திருடப்படுகின்ற பட்சத்தில், கணக்குவைத்திருப்பவர் NDB வங்கிக்கு உடனடியாக எழுத்தில் அறிவிப்பதற்கு கடப்பாடுடையவராவார். NDB வங்கியானது மேலேயுள்ள அறிவித்தலை முன்னர் பெறாமல் காணாமல் போன, சட்டமுறையற்ற விதத்தில் திருடப்பட்ட, மோசடியாக பயன்படுத்தப்பட்ட, மாற்றப்பட்ட அல்லது பொய்யாக புனையப்பட்ட காசோலையொன்றின் மீது பணம் செலுத்தியிருப்பின், NDB வங்கி கணக்குக்கு பற்றுவைப்பதற்கு உரித்துடையதாகும்.

   ஆ) காசோலை இதழ்கள் காணாமல் போகின்ற, திருடப்படுகின்ற அல்லது இடந்தவறி வைக்கப்படுகின்ற பட்சத்தில், கணக்குவைத்திருப்பவர் காசோலை இலக்கம், திகதி, தொகை மற்றும் பணம் செலுத்தப்படுபவரின் பெயர் என்பவற்றை வழங்குவதன் மூலம் கொடுப்பனவை நிறுத்துவதற்கு NDB வங்கிக்கு எழுத்தில் உடனடியாக அறிவித்தல் வேண்டும். அத்தகைய எல்லா அறிவுறுத்தல்களும், சம்பந்தப்பட்ட காசோலை / காசோலைகள் அத்தகைய அறிவுறுத்தலைப் பெறும் வரை செலுத்தப்பட்டிராதிருப்பின் மட்டும் பயனுறும். தொலைபேசியினூடாக வழங்கப்படும் கொடுப்பனவை நிறுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் அதே நாளினுள் எழுத்தில் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய எழுத்திலான அறிவுறுத்தல்கள் அதே நாளினுள் பெறப்படாவிடின், கொடுப்பனவை நிறுத்துவதற்கான அறிவுறுத்தல்களை இரத்துச்செய்வதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

   இ) கணக்குவைத்திருப்பவர் கணக்கில் தேறிப்பெறப்பட்ட நிதிகளுக்கு எதிராக காசோலைகளை வழங்குவதற்கு பொறுப்பேற்றல் வேண்டும்.

   ஈ) கணக்கு வைத்திருப்பவர் இயன்றளவு வரை பொய்யானதாக்குதல் தடுக்கப்படும் அத்தகைய முறையில் எவையேனும் காசோலைகளை வரைதல் வேண்டும். ஆதலால் காசோலை எத்தொகைக்காக வழங்கப்படுகின்றதோ அத்தொகை, உடனடிக் கண்டுபிடிப்பின்றி எண்களின் அல்லது சொற்களின் ஏதேனும் சேர்க்கை இயன்றதல்லாததாகவிருக்கும் அத்தகையதொரு வழியில் சொற்களிலும் எண்களிலும் எழுதப்படுதல் வேண்டும்.

   உ) கணக்கு வைத்திருப்பவர் காசோலைப் புத்தகத்தை மேற்கொண்டு பயன்படுத்த வேண்டியிராதபட்சத்திலும் கணக்கு மூடப்படும் விடயத்திலும், இயன்றளவு விரைவாக காசோலைப் புத்தகத்தை / எல்லாப் பயன்படுத்தப்படாத காசோலை இதழ்களையும் NDB வங்கிக்குத் திருப்பி ஒப்படைப்பதற்கு கணக்கு வைத்திருப்பவர் கடப்பாடுடையவராவார்.

16. NDB வங்கியானது, **லாபம்**, தரகுப்பணம், அல்லது வேறு வங்கித்தொழில் விதிப்பனவுகள், செலவுகள் (சட்ட விதிப்பனவுகள் உட்பட) எல்லாவற்றுக்கும் மற்றும் கணக்குவைத்திருப்பவரின் கணக்கு (கணக்குகள்) தொடர்பாக ஏதேனும் நேரத்தில் NDB வங்கியின் மீது விதிக்கப்பட்ட அரசாங்க வரிகள், வேறு வரிகள், விதிப்பனவுகள் அல்லது அறவீடுகளை எதிர்கொள்வதற்கு NDB வங்கி கோரப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகைகளுக்கும் அத்தகைய கணக்குக்கு (கணக்குகளுக்கு) பற்றுவைக்கலாம். மேலதிகமாக, கணக்கு தொடர்பான தபாற்செலவு, முத்திரைகள், தொலைபேசி, வேறு விதிப்பனவுகள் போன்ற NDB வங்கியினால் ஏற்கநேர்ந்த எல்லாச் செலவுகளும் கணக்குவைத்திருப்பவருக்கு பொறுப்பிக்கப்படும்.

17. NDB வங்கிக்கு வழங்கப்படும் எல்லாத் தகவல்களும் (கணக்குத் திறத்தல் படிவத்தில் அல்லது வேறுவகையாக) கணக்குவைத்திருப்பவரின் அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானவை எனவும் செம்மையானவை எனவும் கணக்குவைத்திருப்பவர் நம்புறுதியளிக்கின்றார். பதவிதாங்குநர்கள், நம்பிக்கைப்பொறுப்பாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்கள், அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினர் மற்றும் அவர்களின் முகவரிகளிலான (வதிவிட மற்றும் அஞ்சல் ஆகிய இரண்டும்) ஏதேனும் மாற்றம் உட்பட இத்தகவலிலான ஏதேனும் மாற்றம் பற்றி கணக்குவைத்திருப்பவர் NDB வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

18. NDB வங்கியுடனான எல்லாப் பண வைப்புக்களும் அதன் கருமபீடங்களில் செலுத்தப்படற்பாலனவாகும்.

19. காசோலை வைப்புப் பெட்டிகளினால் அல்லது வங்கியினால் பயன்படுத்தப்படும் வேறு ஏதேனும் பொறியினால் வழங்கப்படும் தற்காலிக அறிவித்தல் எவ்வாறிருப்பினும், NDB வங்கி எச்சூழ்நிலைகளின் கீழும் அல்லது எத்தகையதுமான எக்காரணத்துக்காகவேனும், காசோலை வைப்புப் பெட்டிகளினுள் வைப்பிலிடப்பட்டதாகச் சொல்லப்பட்ட காசோலைகள் தொடர்பில் அவ்வாறு வைப்பிலிடப்பட்ட காசோலைகள் கணக்கு வைத்திருப்பவரின் கணக்குக்கு (கணக்குகளுக்கு) வரவு வைக்கப்பட்டிருந்தாலொழிய, எவையேனும் உரிமைக் கோரிக்கைகளை ஏற்றுக் கவனித்தலாகாது.கணக்கு வைத்திருப்பவரின் கணக்குக்கு (கணக்குகளுக்கு) வைப்பிலிடப்பட்ட காசோலைகள் சேகரிப்புக்காக மட்டும் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பணஞ் செலுத்தும் வங்கியினால் தீர்வுசெய்யப்படும் வரை வரும்படிகள் மீளப் பெறப்படுவதற்குக் கிடைக்கக்கூடியனவாகவும்மாட்டாது. நிதிகள் கிடைக்கக்கூடிய திகதி, சுட்டிக்காட்டுகை நோக்கங்களுக்காக மட்டுமே காட்டப்படுகின்றது.

20. நம்பிக்கைப்பொறுப்புக் கணக்கின் விடயத்தில், நம்பிக்கைப்பொறுப்புக் கணக்கானது நம்பிக்கைப்பொறுப்புச் சாதனத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு கண்டிப்பாக நம்பிக்கைப்பொறுப்பின் நோக்கத்துக்காக பயன்படுத்தப்படுகின்றது என உறுதிப்படுத்துவதற்காக நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் பிரத்தியேகமாக பொறுப்பாகவும் வகைகூறக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நம்பிக்கைப்பொறுப்புக் கணக்கைத் திறத்தல் மற்றும் பேணுவதற்கு அனுமதிப்பதன் விளைவாக ஏதேனும் வழக்காடல், உரிமைக்கோரிக்கை, கோரிக்கை அல்லது NDB வங்கிக்கான இழப்புக்கு எதிராக NDB வங்கி, அதன் பணிப்பாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் நட்டோத்தரவாதமளித்தலும் வேண்டும்.

21. வெளிநாட்டு நாணய கணக்கு வைத்திருப்பவர்கள், வெளிநாட்டு நாணய கணக்குகள் தொடர்பான இயைபான சட்டங்கள், துணை விதிகள், வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள், வேறு ஒழுங்குவிதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் அவை போன்றவற்றுக்கு பரிச்சயமாகவிருப்பதற்கு / அவற்றை அறிந்திருப்பதற்கு ஆலோசனையளிக்கப்படுகின்றனர் என்பதுடன் நியதிச்சட்ட / ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகளின் மீறுகை ஆபத்தை ஒழிப்பதற்கென எல்லா நேரங்களிலும் அவற்றுடன் இணங்கியொழுகுதலும் வேண்டும்.

22. (வரையறையின்றி) கணக்குவைத்திருப்பவர் ஒருவர், வங்கியில் அல்லது கணக்குவைத்திருப்பவருடன் வைத்திருக்கப்படும் கணக்கு / வங்கியுடனான கணக்குவைத்திருப்பவரின் தொடர்பு பற்றிய தகவல்கள் உட்பட கணக்கு சம்பந்தமான எவையேனும் தகவல்களை ஏதேனும் நோக்கத்துக்காக பின்வருபவர்களுள் எவருக்கும் வெளிவிடுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது என கணக்கு வைத்திருப்பவர் சம்மதமளித்து இத்தால் அதிகாரமளிக்கின்றார்:

   (i) கணக்குவைத்திருப்பவரைக் குறிப்பீடு செய்யாது, கணக்கு (கணக்குகள்) சம்பந்தமாக வேறு எவரேனும் வங்கியாளர்கள், கடன் தகவற் பணியகம் அல்லது வேறு எவரேனும் அதிகாரி அல்லது எவரேனும் சட்டரீதியாக அதிகாரமளிக்கப்பட்ட திறத்தவர். ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அத்தகைய ஏதேனும் பதில் ஒரு வங்கிக் குறிப்பீட்டை உள்ளடக்கலாம்;

   (ii) அத்தகைய வெளிவிடுகையைச் செய்வதற்கு சட்டத்தினால் அல்லது நீதிமன்றக் கட்டளையினால் எந்த ஆளுக்குச் செய்வதற்கு வங்கி தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்த எவரேனும் ஆள்;

   (iii) வங்கிக்கு அந்தரங்கத்தன்மைக் கடப்பாட்டின் கீழ் உள்ள எவரேனும் ஆள்.

23. இந்நியதி நிபந்தனைகளின் கீழான வங்கியின் கடப்பாடுகள் சேவை மட்ட நியமங்களுடன் சேர்த்து வங்கியின் துணை நிறுவனங்கள், இணைக்கப்பெற்ற நிறுவனங்கள் அல்லது ஒப்பந்ததாரர்கள் எவருக்கும் குறித்தளிக்கப்படலாம் அல்லது அவற்றினால் நிறைவேற்றப்படலாம் என்பது தவிர, திறத்தவர் ஒருவர் மற்றைய திறத்தவரின் எழுத்திலான சம்மதமின்றி சேவை மட்ட நியமங்களுடன் சேர்த்து இந்நியதிநிபந்தனைகளின் கீழ் அவரது உரிமைகளை அல்லது கடப்பாடுகளை குறித்தளித்தலோ அல்லது கைமாற்றுதலோ ஆகாது. அத்தகைய எடுத்துரைப்பு, குறித்தளிப்பு அல்லது கைமாற்றுகை காரணமாக கணக்குவைத்திருப்பவரின் உரிமைகள் குறைக்கப்படுகின்ற பட்சத்தில், வங்கியானது கணக்குவைத்திருப்பவரின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

24. தொலைநகல் / மின்னஞ்சல் மூலமான வங்கித் தொழில் அறிவுறுத்தல்கள்

   (i) முரணாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்கள் NDB வங்கிக்கு
   அறிவுறுத்தினாலொழிய (4ஆம் வாசகத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும்), ஒரு தொலைநகல் பொறியினூடாக அல்லது பெயர்குறிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரியினூடாக அனுப்பப்பட்ட கணக்குவைத்திருப்பவரின் வங்கித் தொழில் அறிவுறுத்தல்களின் மீது
   செயலாற்றுவதற்கு NDB வங்கி அதிகாரமளிக்கப்படுகின்றது, ஆனால் கடப்பாடுடையதல்ல (இந்நியதி நிபந்தனைகள் முரணாக வெளிப்படையாக வேறு வகையில் கூறினாலொழிய, அவை தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்களிடமிருந்து தேவைப்பட்ட அல்லது அவர்களினால் வழங்கப்பட்ட எவையேனும் அறிவுறுத்தல்கள் உட்பட). அத்தகைய மின்னஞ்சல் (மின்னஞ்சல்கள்), NDB வங்கிக்கு வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கிணங்க கணக்கு வைத்திருப்பவரின் அறிவுறுத்தல்களின் ஸ்கான் செய்யப்பட்ட, கையொப்பமிடப்பட்ட பிரதியொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். இந் நோக்கத்துக்காகப் பெயர்குறிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரி, நானாவித உருவகங்களுக்கான கணக்கு திறத்தல் முதன்மை பொறுப்பாண்மைப் படிவத்தில் NDB வங்கிக்கு வழங்கப்பட்ட கணக்கு வைத்திருப்பவரின்
   (வைத்திருப்பவர்களின்) மின்னஞ்சல் முகவரியாகவிருத்தல் வேண்டும். கணக்கு வைத்திருப்பவரினால் (வைத்திருப்பவர்களினால்) நியமிக்கப்பட்ட அற்றோணிகளுக்கு இது ஏற்புடையதாதலாகாது.

   (ii) பின்வருவனவற்றின் விளைவாக எவ்கையினதுமாக எழுகின்ற அல்லது பின்வருவனவற்றுடன் எவ்வகையிலும் தொடர்புபட்ட வழக்குகள், துடர்ச்சிகள், வழக்கு நடவடிக்கைகள், செலவு தொகைகள், உரிமைக்கோரிக்கைகள், கோரிக்கைகள், விதிப்பனவுகள், செலவுகள், இழப்புக்கள் மற்றும் பொறுப்புகள் எல்லாவற்றிலிருந்தும் அவற்றுக்கெதிராகவும் வங்கி ஏற்கநேரும் எத்தகையதுமான ஏதேனும் உரிமைக்கோரிக்கை, இழப்புக்கள், சேதம் என்பவற்றிலிருந்து கணக்குவைத்திருப்பவர் NDB வங்கியை விடுவித்து NDB வங்கிக்கு நட்டோத்தரவாதமளித்தலும் அதற்குத் தீங்கு விளையாதவாறு வைத்திருத்தலும் வேண்டும்:

      அ) எழுத்திலான தொலைநகல் அறிவுறுத்தல் (அறிவுறுத்தல்கள்) அல்லது சொல்லப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரியினூடாக அனுப்பப்பட்ட அறிவுறுத்தல்கள் பிழையாகத் தொடங்கப்பட்டுள்ளமை அல்லது

கடத்தப்பட்டுள்ளமை அல்லது தொடர்பாடல் அல்லது கடத்தல் வழிகளில் மோசடியானமுறையில் மாற்றப்பட்டமை, பிழையாக விளங்கிக்கொள்ளப்பட்டமை அல்லது திரிபுபடுத்தப்பட்டமை எவ்வாறிருப்பினும், மேலேயுள்ளவாறான அத்தகைய அறிவுறுத்தலுக்கு (அறிவுறுத்தல்களுக்கு) இணங்க NDB வங்கி நல்லெண்ணத்துடன் செயலாற்றியுள்ளமை, அத்துடன்

ஆ) அனுப்புகின்ற அல்லது பெறுகின்ற பொறியின் பழுது, தவறுகை அல்லது தயார்நிலையில் இல்லாத நிலைமையுடன் சம்பந்தப்பட்டதாயினுஞ்சரி, NDB வங்கிக்கு அதன் உள்ளபடியான அனுப்புகை தவறியமை காரணமாக அல்லது எத்தகையதுமான காரணத்துக்காகவும் NDB வங்கியினால் பெறுகை தவறியமை காரணமாக கணக்குவைத்திருப்பவரின் எழுத்திலான, தொலைபேசி, தொலைநகல் அல்லது மின்னஞ்சல் அறிவுறுத்தலுக்கு (அறிவுறுத்தல்களுக்கு) இணங்க NDB வங்கி செயலாற்றாது தவிர்ந்துள்ளமை, அல்லது

இ) NDB வங்கி குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதியினுள் தொலைநகல் அறிவுறுத்தலின் (அறிவுறுத்தல்களின்) எல்லா மூலப் பிரதிகளையும் NDB வங்கிக்கு அனுப்பிவைப்பதற்கு கணக்குவைத்திருப்பவர் தவறியமை.

(iii) அறிவுறுத்தல்கள் பெறப்பட்ட நேரத்தில் அறிவுறுத்தல்களை வழங்குகின்ற அல்லது வழங்குகின்றவராகக் கொள்ளப்படுகின்ற ஆளின் அதிகாரம் அல்லது ஆளடையாளம் பற்றி விசாரணை செய்வதற்கும் (நிலவுகின்ற சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாது) தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் வங்கிக்கு வழங்கப்பட்ட எவையேனும் அறிவுறுத்தல்களின் அல்லது கட்டளைகளின் மெய்யான தன்மையை அல்லது வேறுவகையான தன்மையைச் சரிபார்ப்பதற்கும் NDB வங்கி எத்தகையதுமான எப்பொறுப்பின் கீழும் இருத்தலாகாது. தொலைநகல் மற்றும் மின்னஞ்சல்கள் பெறப்பட்ட நேரமும் திகதியும் மீதான NDB வங்கியின் விதிப்பை கணக்கு வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) கணக்கு வைத்திருப்பவரினால் வழங்கப்படாதனவும் அல்லது கணக்கு வைத்திருப்பவரினால் அதிகாரமளிக்கப்படாதனவும் ஆனால் கணக்கு வைத்திருப்பவரின் அல்லது கணக்கு வைத்திருப்பவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் அல்லது கட்டளைகள் என NDB வங்கி நல்லெண்ணத்துடன் நம்பிய தொலைநகல் அல்லது மின்னஞ்சல் அறிவுறுத்தல்கள் அல்லது கட்டளைகள் மீது NDB வங்கி செயலாற்றினால் கணக்கு வைத்திருப்பவர் அடையக்கூடிய ஏதேனும் இழப்புக்கு NDB வங்கி பொறுப்பாதலாகாது. ஆயின், NDB வங்கி அதன் தனித் தற்றுணியில் எவையேனும் தொலைநகல் அறிவுறுத்தல்கள் அல்லது மின்னஞ்சல் அறிவுறுத்தல்கள் அல்லது கட்டளைகள் மீது செயலாற்றுவதற்கு மறுக்கலாம்.

(v) தொலைநகல் அல்லது மின்னஞ்சல் அறிவுறுத்தல்களை அல்லது கட்டளைகளை ஏற்றுக்கொள்வதற்கு NDB வங்கிக்குள்ள அதிகாரம் ஒரு தொடர்ச்சியான அதிகாரமாகவுள்ளதுடன் அத்தகைய அதிகாரத்தை முடிவுறுத்துகின்ற கணக்கு வைத்திருப்பவரின் எழுத்திலான அறிவித்தல் NDB வங்கியினால் பெறப்படும்வரை வலுவில் இருத்தலும் வேண்டும்.

(vi) தொலைநகல் மூலமான அனுப்புகைகள் அல்லது மின்னஞ்சல்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டளைகளை வழங்குவதற்கு பாதுகாப்பான வழிகள் அல்லவென்பதை கணக்குவைத்திருப்பவர் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் சம்பந்தப்பட்டுள்ள அபாயங்களையும் அத்தகைய தொலைநகல் அல்லது மின்னஞ்சல் அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டளைகளை ஏற்று அவற்றின் மீது செலாற்றுவதற்கான NDB வங்கிக்கான கணக்குவைத்திருப்பவரின் கோரிக்கை கணக்குவைத்திருப்பவரின் வசதிக்கானதென்பதையும் கணக்கு வைத்திருப்பவரின் அபாயத்தில் மட்டுமே என்பதையும் கணக்குவைத்திருப்பவர் அறிந்துள்ளார்.

25. ஐஅநாடுகளின் வெளிநாட்டுக் கணக்கு வரி இணங்கியொழுகுகைச் சட்டம் (FATCA) – உருவகத்துக்கு ஏற்புடையதாகும்

கணக்குவைத்திருப்பவரினால் திறக்கப்பட்ட / பேணப்பட்ட / செய்யப்பட்ட அத்துடன் அல்லது மூடிவிடப்பட்ட கணக்கு (கணக்குகள்) தொடர்பிலான எல்லாத் தகவல்களையும், அத்தகைய தகவல்களை வெளிவிடுவதற்கான தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்கானவொரு கடமை / கடப்பாடு NDB வங்கியின்மீது சுமத்தப்படுமிடத்து, ஐக்கிய அமெரிக்க நாடுகளின் உள்ளக அரசிறைச் சேவைக்கு (IRS) அல்லது வேறேதேனும் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைக்கு அல்லது வேறேதேனும் நியாயாதிக்கத்துக்கு அறிக்கையிடுவதற்கு கணக்குவைத்திருப்பவர் / பதவிதாங்குநர்கள், அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்கள் / அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினருக்கு குறிப்பீடு செய்தோ அல்லது குறிப்பீடு செய்யாமலோ NDB வங்கி இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

இச்சம்மதம், (திருத்தப்பட்டவாறான) இலங்கையின் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் 77 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின் படி வழங்கப்படுகின்றது.

கணக்குவைத்திருப்பவரிடமிருந்து ஏதேனும் மேலதிகச் சம்மதமின்றி, FATCA வின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது வேறு நியாயாதிக்கத்தினால் / நியாயாதிக்கங்களினால் விதிக்கப்பட்ட / அல்லது விதிக்கப்படும் வேறேதேனும் ஒழுங்குவிதி / ஒழுங்குவிதிகளின்கீழ் கணக்குக்கு (கணக்குகளுக்கு) பற்று வைப்பதன் மூலம், தேவைப்படின் IRS இற்கு, அல்லது வேறேதேனும் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைக்கு / சபைகளுக்குச் செலுத்தப்படத்தக்கதான எவையேனும் வரிகளை அத்துடன் / அல்லது அறவீடுகளை அனுப்புவதற்கு NDB வங்கி மேலும் அதிகாரமளிக்கப்படுகின்றது.

26. NDB வங்கியானது எந்நேரத்திலும் அதன் தனி மற்றும் கட்டற்ற தற்றுணிபில் கணக்குவைத்திருப்பவரின் கடைசியாகப் பதியப்பட்ட முகவரிக்குப் பதினான்கு (14) நாட்கால எழுத்திலான அறிவித்தலை வழங்கிய பின்னர், அவற்றுக்கான ஏதேனும் காரணத்தைக் குறித்தளித்து அல்லது குறித்தளிக்காமல் ஏதேனும் கணக்கைத் திறப்பதற்கு மறுக்கலாம் அத்துடன் / அல்லது ஏதேனும் கணக்கை மூடிவிடலாம் அத்துடன் / அல்லது எவையேனும் சேவைகளை முடிவுறுத்தலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் கணக்குவைத்திருப்பவரின் உடைமையில் உள்ள எல்லாப் பயன்படுத்தப்படாத காசோலைகளையும் கோரிக்கையின் மீது கணக்குவைத்திருப்பவர் திருப்பி ஒப்படைத்தல் வேண்டும்.

(i) இருபத்து நான்கு (24) மாத காலப்பகுதியொன்றுக்கு செயலற்ற அத்துடன் / அல்லது (வங்கியின் இணையத்தளத்தில் வெளியிடப்படும் காலத்துக்குக் காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக) குறைந்தபட்ச மீதி பேணப்படாத கணக்கை (கணக்குகளை) கணக்கு வைத்திருப்பவரின் கடைசியாகப் பதியப்பட்ட முகவரிக்கு மூடிவிடுகை பற்றிப் பதினான்கு (14) வேலை நாட்கால எழுத்திலான அறிவித்தலை வழங்கியதன் பின்னர், அவ்வாறு மூடிவிடுவதற்கான உரிமையை வங்கி அதன் தற்றுணிபில் கொண்டுள்ளது. அத்தகைய சந்தர்ப்பங்களில், எவையேனும் விதிப்பனவுகளை சேகரிப்பதற்கு அல்லது தரகுப்பணமாக கணக்கில் உள்ள மீதியை எடுப்பதற்கு NDB வங்கி உரிமையைக் கொண்டுள்ளது.

(ii) அந்நேரத்தில் வலுவிலுள்ள வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் அல்லது வேறு ஏதேனும் சட்டம், ஒழுங்குவிதி, பணிப்பு அல்லது கட்டளையின் ஏதேனும் மீறுகை இருந்துள்ளது என NDB வங்கி திருப்திப்படுகின்றபட்சத்தில், வங்கியானது அதன் சொந்த விருப்பில் கணக்குவைத்திருப்பவருக்கான (கணக்குவைத்திருப்பவர்களுக்கான) அறிவித்தலின்றி கணக்கை மூடிவிடலாம்.

(iii) வங்கி, ஒன்றில் அதன் சொந்தத் தூண்டுதலின் பேரில் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது நிருவாகக் கட்டளையின் தூண்டுதலின் பேரில் அல்லது வேறுவகையாக, கணக்குவைத்திருப்பவருக்கு முன்னறிவித்தலின்றி அல்லது கணக்குவைத்திருப்பவரின் பேரில் வங்கி கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் கடமையின் ஏதேனும் மீறுகைக்குப் பொறுப்பாகாமல், கணக்கு (கணக்குகள்) எவற்றின் மீதும் கையாளுகையை மூடிவிடலாம், முடக்கலாம் அல்லது இடைநிறுத்தலாம்.

(iv) விதிவிலக்காக, இயைபான சட்டங்களுடனும் ஒழுங்குவிதிகளுடனும் இணங்கியொழுகுதலானது, ஏதேனும் கொடுப்பனவை செய்வதனை அல்லது தீர்த்துவைப்பதனை, கணக்குவைத்திருப்பவரின் அறிவுறுத்தல்களை அல்லது சேவைகளுக்கான விண்ணப்பத்தை செய்முறைப்படுத்துவதனை அல்லது சேவைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றின் பாகத்தை வழங்குவதனை NDB வங்கி தாமதிப்பதற்கு, முடக்குவதற்கு அல்லது மறுப்பதற்கு இட்டுச்செல்லலாம். சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு, அத்தகைய சட்டம் அல்லது ஒழுங்குவிதியுடன் இணங்கியொழுகுதல் தொடர்பாக முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்படுத்தப்பட்டதும் எவ்வகையினதுமாக எழுகின்றதும் கணக்குவைத்திருப்பவரினால் அல்லது மூன்றாம் திறத்தவரினால் அடையப்பட்டதும் அல்லது ஏற்கநேர்ந்ததுமான ஏதேனும் இழப்பு தொடர்பில் NDB வங்கி கணக்குவைத்திருப்பவருக்கு அல்லது மூன்றாம் திறத்தவருக்கு பொறுப்பாதல் ஆகாது.

27. இந்நியதிநிபந்தனைகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டங்களினால் ஆளப்படுதல் வேண்டும் என்பதுடன் அவற்றுக்கிணங்க பொருளமைத்துக்கொள்ளப்பட்டு பயனுறுதலும் வேண்டும். வழக்கு நடவடிக்கைகள் இலங்கை நீதிமன்றங்களில் கொணரப்படுதல் வேண்டும், ஆயின் எப்போதும் NDB வங்கியானது அது தகுதியானதெனக் கருதுகின்ற வேறு ஏதேனும் நாட்டின் அல்லது நியாயாதிக்கத்தின் நீதிமன்றங்களில் வழக்கு நடவடிக்கைகளை எடுப்பதற்கு விரும்பின், அத்தகைய சந்தர்ப்பத்தில் அத்தகைய நீதிமன்றங்களுக்கு ஏற்புடையனவான சட்டங்கள் ஏற்புடையனவாதல் வேண்டும், அத்துடன் கணக்குவைத்திருப்பவர் அத்தகைய நீதிமன்றங்களுக்கும் அத்தகைய வேறு சட்டங்களுக்கும் கீழ்ப்படிவதற்கு உடன்படுதல் வேண்டும் என்பதுடன் ஏற்கநேர்ந்த எவையேனும் சட்ட செலவுதொகைகள், நீதிமன்ற கட்டணங்கள் மற்றும் வழக்கறிஞர் கட்டணங்கள் கணக்குவைத்திருப்பவரின் கடன்படுநிலைக்கு சேர்க்கப்படுதலும் வேண்டும்.

28. வாய்மொழி மூலம் அல்லது எழுத்தில் வங்கிக்கு அல்லது மிகக்கிட்டியதாகவுள்ள கிளைக்கு அல்லது வங்கியின் அழைப்பு மையத்துக்கு அல்லது தலைமையலுவலகத்துக்கு, வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக அல்லது அதன்கண் வழங்கப்பட்ட நடவடிக்கைமுறையின்படி வங்கியின் ஏதேனும் உத்தியோகபூர்வ வெளியீட்டின் அல்லது அறிவித்தலின் ஊடாக வெளியிடப்பட்டவாறு கணக்குவைத்திருப்பவர்
வங்கிக்கு ஏதேனும் முறைப்பாட்டைச் செய்வதற்கு உரிமையுடையவராதல் வேண்டும். முறைப்பாடொன்று தீர்த்துவைக்கப்படாதவிடத்து, கணக்கு வைத்திருப்பவர் நிதி குறைகேள் அதிகாரி மற்றும் இலங்கை மத்திய வங்கி ஊடாகத் தீர்வை நாடலாம்.

29. வங்கியானது எவையேனும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களையும் தொடக்க நிலைக்கு மேலான கொடுக்கல்வாங்கல்களையும் இயைபான அதிகாரிக்கு அறிக்கையிடுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

30. வியாபார வங்கித்தொழில் பிரிவுகளுக்கான தகைமையின் அடிப்படையில், கணக்கு வைத்திருப்பவர் காலாண்டுக்கொருமுறை என்ற அடிப்படையில் வங்கியினால் தரமுயர்த்தப்படுவார் அல்லது தரமிறக்கப்படுவார் என்பதுடன் அதுபற்றி கணக்கு வைத்திருப்பவருக்கு பதிவஞ்சலில் அனுப்பப்படும் கடிதத்தின் மூலம் அறிவிக்கப்படுதலும் வேண்டும் என கணக்கு வைத்திருப்பவர் இத்தால் உடன்படுகின்றார்.

31. வங்கியானது கணக்கு வைத்திருப்பவரின் குறிக்கப்பட்ட கையடக்கத்தொலைபேசி இலக்கத்துக்கு அனுப்பப்பட்ட எஸ்எம்எஸ் மூலம் அனுப்பப்பட்ட / கணக்கு வைத்திருப்பவரின் குறிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சல் ஒன்றின் மூலம் அனுப்பப்பட்ட முன்னறிவித்தலுடன் குறைந்தபட்ச சராசரி வரவு மீதியை வேறுபடுத்துவதற்கு, திரிபுபடுத்துவதற்கு, அதிகரிப்பதற்கு அல்லது குறைப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டும் என கணக்கு வைத்திருப்பவர் இத்தால் உடன்படுகின்றார்.

32. வங்கியானது எந்நேரத்திலும் அதன் முழுத் தற்றுணிபில் கணக்குவைத்திருப்பவருக்கான அறிவித்தலுடன் இந்நியதி நிபந்தனைகளுள் எவற்றையும் திருத்துவதற்கு, குறைநிரப்புவதற்கு அல்லது வேறுபடுத்துவதற்கு வங்கி உரித்துடையதாதல் வேண்டும் எனவும் அத்தகைய திருத்தம், குறைநிரப்பி அல்லது வேறுபாடு கணக்குவைத்திருப்பவர் மீது பிணிக்கப்படுததாதல் வேண்டும் எனவும் கணக்குவைத்திருப்பவர் இத்தால் உடன்படுகின்றார். நியதி நிபந்தனைகளின் இற்றைப்படுத்தப்பட்ட பதிப்பு (பதிப்புக்கள்) வங்கியின் கூட்டாண்மை நிறுவன இணையத்தளத்தில் கிடைக்கக்கூடியதாக்கப்படுகின்ற அதே வேளை கணக்கு வைத்திருப்பவரின் குறிக்கப்பட்ட கையடக்கத்தொலைபேசி இலக்கத்துக்கு அனுப்பப்பட்ட எஸ்எம்எஸ் மூலம் / கணக்கு வைத்திருப்பவரின் குறிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சல் மூலம் கணக்குவைத்திருப்பவருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். கணக்குவைத்திருப்பவர் (ஏற்புடையவாறு) எவையேனும் தெளிவுபடுத்தல்களுக்கு இயைபான தொடர்பு முகாமையாளரை அல்லது கடன் அலுவலரை தொடர்புகொள்ளலாம்.